## அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்

நாள்:09 .08..2016

09.08.2016 அன்று இக்கல்லூரியில் நடைபெற உள்ள தன்னாட்சி நிதிக் குழுக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருள்களின் தொகுப்பு கல்லூரி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரால் பணிந்து வைக்கப்படுகிறது.

| வ.எண்: | பொருள் | நிதிக்குழுவினரால் எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|---|
| 1 | 2015–16 ஆண்டு தேர்வு நிதி வரவு மற்றும் செலவு குழுவின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | பார்வையிடப்பட்டது |
| 2 | 2015–16 ஆண்டு தன்னாட்சி நிதி வரவு மற்றும் செலவு குழுவின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | பார்வையிடப்பட்டது. |
| 3 | 2016–17 ம் ஆண்டிற்கு ஹைதராபாத் பல்கலைக் கழக மானியக் குழு மண்டல அலுவலகத்திலிருந்து பெறப்பட வேண்டிய தன்னாட்சி நிதி உத்தேசமாக ரூ.25,94,000/- ஐ செலவிடும் பொருட்டு அனுமதிக்கப்பட்ட தலைப்புக்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து உத்தேச செலவினப் பட்டியலை குழு முன் பரிசீலனைக்கு வைத்து குழு ஒப்புதல் பெறுதல். | ஒப்புதல் அளிக்கலாகிறது |
| 4 | தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆகஸ்ட் 2015– ல் ஊதியத்தை உயர்த்தி தீர்மானம் இயற்றப்பட்டது . தற்போதைய விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அலுவலகப் பணியாளர்கள் ஊதியத்தை உயர்த்தி வழங்குமாறு விண்ணப்பங்கள் அளித்துள்ளனர். எனவே ஊதியத்தை உயர்த்தி வழங்குவது குறித்து பரிசீலனை செய்தல். | இறுதி காலத்திற்கெண்ணாள் நடைமுறை பரிசீலிக்கலாம் என தெரிவிக்கலாகிறது. |
| 5 | கல்லூரி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.G. இராஜேந்திரன் என்பவர் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் உதவியாளராக பணியில் சேர்ந்து உள்ளார். அன்னார் அவர்களுக்கு மாதத்தோறும் ரூ.750/- மதிப்பூதியமாக வழங்க பரிசீலனை செய்தல். | அலுவலகம் கூடுதல் பணிக்காலம் உடைய நபரை அமர்த்தலாம் |
| 6 | பாரதிதாசன் பல்கலைகழக விதிகளின் படி மைய மதிப்பீட்டு பணிக்கு 6 Examiner-க்கு ஒரு Chief Examiner நியமிக்கப்படபரிசீலித்தல். | ஒப்புதல் அளிக்கப்படுகிறது |

Academic Council, Board of Studies முதலான கூட்டங்களில் பங்கேற்கும் நமது கல்லூரி ஆசிரியர்களுக்கு DA/ Honorarium செலவினை தேர்வு நிதியிலிருந்து செலவழிக்க அனுமதி வேண்டப்படுகிறது. — ஒப்புதல் அளிக்கப்படு[illegible]

| வ.எண்: | பொருள் | நிதிக்குழுவினரால் எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|---|
| 7 | கல்லூரியில் தேர்வு நடைபெறும் நாள்களில் External Squad அமர்த்திக் கொள்ளவும் அவருக்கு மதிப்பூதியம் ரூ.300 / – மற்றும் தினப்படி / பயணப்படி வழங்கப்பட்டு வருகிறது. External Squad-க்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தை ஒரு நாளைக்கு ரூ.500/-ஆக உயர்த்தி வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கலாம் |
| 8 | மைய மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுத்தப்படும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தேனீர், காபி, வடை மற்றும் பிஸ்கட் ஒரு நபருக்கு ரூ.20/– வீதம் செலவிடப்படலாம் என 2014–15–ல் நிர்ணயம் செய்யப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது. பாரதிதாசன் பல்கலைகழக விதிகளின் படி ரூ.25/- ஆக உயர்த்தி நிர்ணயம் செய்வது குறித்து முடிவெடுத்தல். | அனுமதிக்கலாம் |
| 9 | கல்லூரியின் இணையதள பதிவு, புதுப்பித்தல், வடிவமைத்தல் மற்றும் பராமரிக்கும் செலவினத்திற்கு ஒருவருடத்திற்கு உத்தேசமாக ரூ.15000/- தேர்வு நிதியிலிருந்து செலவிட அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கலாம் |
| 10 | கல்லூரியின் சூரிய மின்சக்தி சாதனத்திற்கு தேவையான பராமரிப்பு செலவினங்களை தேர்வு நிதியிலிருந்து செலவிட அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 11 | கல்லூரியின் தன்னாட்சி நிதி கணக்கை தணிக்கை செய்வதற்கு தணிக்கையாளருக்கு ரூ.1500/- வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையை ரூ.3000/-ஆக உயர்த்தி வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கலாம். |

**<u>நிதிக்குழு உறுப்பினர்கள்:</u>**

| உறுப்பினர் | கையொப்பம் |
|---|---|
| 1. முனைவர் திருமதி. M. பியாட்ரிஸ் மார்க்ரெட் , தஞ்சாவூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் | [signature] 9/8/16. |
| 2. திருமதி. வி. லெட்சுமி, முதல்வர் (பொறுப்பு) | V. [signature] 9/8/16 |
| 3. முனைவர் திருமதி சு. அகிலா, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் | சு. [signature] 9/8/16 |
| 4. திருமதி. த. அல்லி, இயற்பியல் துறைத் தலைவர் | Not attended |
| 5. திருமதி .பி.விஜயலெட்சுமி, இயற்பியல் இணைப் பேராசிரியர் | [signature] 9/8/16 |
| 6. திரு. ந. இராமகிருஷ்ணன், பட்டயத் தணிக்கையாளர் | [signature] |